தேருக்கு இரும்புச் சக்கரங்கள் நான்கு மற்றும் இரும்பு அச்சுகள் வாங்க எவ்வளவு செலவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செலவானது என்ன என்று கேட்கிறீர்களா? வாங்கிக் கொடுத்துவிட்டார்களே?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், திருமோகூர் அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில் 108 திவ்யதேசங்களில் ஒன்று; நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பெருமைமிக்க 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்று. இத்திருக்கோயிலின் பசலி 1412 உதவித் தொகை நிர்ணய வருமானம் 22 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திருக்கோயிலுக்கு 1995-ல் திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்யப்பட்டது. இத்திருக்கோயிலில் வைகாசி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் வழக்கமாகத் தேரோட்டம் நடைபெறுகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான தேருக்கு இரும்புச் சக்கரங்கள் நான்கு மற்றும் இரும்பு அச்சுகள் திருச்சி, பாரத மிகுமின் தொழிலகத்தின் மூலம் ரூ.3,17,277-க்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு உரிய அங்கீகாரத்துடன் கடந்த 28-11-2003 அன்றே தேருக்குப் பொருத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெற்று, கடந்த வைகாசி மாதம் பிரம்மோற்சவ விழாவின்போது தேரோட்டம் நடைபெற்று உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

47—

துணைச் சுகாதார நிலையம்

***37386—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, கல்லகம் ஊராட்சிக்கு துணைச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2004 ஜூலை 28]

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை 22-4-2003 அன்றைக்கு எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இதுபோன்ற துணைச் சுகாதார நிலையங்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்திற்கேற்ப மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய அந்தத் துணைச் சுகாதார நிலையம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்துவரும் புள்ளம்பாடியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை, இதுவரையிலும் கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் இந்தியாவிலே இதுவரையிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 117 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றைய தினம் 2004 வரை, கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.